Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.164/2021

**Depositions of PW- 9**

| Name | திரு.குமரகுரு | Occupation | குடிமை மருத்துவர் |
|---|---|---|---|
| Father's name | பழனிச்சாமி | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026.

19.02.2026

2ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.09.2020 அன்று மாலை 06.50 மணியளவில் நான் முதுநிலை உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது 50 வயது மதிக்கத்தக்க மாயாண்டி சிகிச்சைக்காக வந்தார். அன்று சுமார் மாலை 05.00 மணியளவில் ரெங்கநாதபுரம் வடக்கு தெருவிலுள்ள பெட்டிக்கடை அருகில் அடையாம் தெரிந்த நபர்கள் கம்பால் அடித்ததால் காயம் அடைந்ததாக கூறினார். அவர் தனக்கு இடது கை மற்றும் இடது பக்க முகத்தில் வலி இருப்பதாக கூறினார். அவரைபரிசோதித்து பார்த்ததில் கீழ்க்கண்ட காயங்கள்

1) இடது மணிக்கட்டுக்கு அருகில் வீக்க காயமும் எலும்பு முறிவு அறிகுறியும் இருந்தது.

2) இடது கண்ணிற்கு கீழ் ஒரு வீக்க காயமும் காணப்பட்டது. அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளித்தேன். பின்னர் இடது கண் பகுதியில் வீக்கம் காணப்பட்டதால் அவரை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அவர் அங்கு செல்லவில்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்களின்

தன்மை பற்றி கூறமுடியாது என்று சான்று வழங்கினேன். **அசா.1ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ.4 ஆகும்.**

பின்னர் அதே தேதியன்று மாலை 06.55 மணியளவில் 70 வயது மதிக்கத்தக்க மாயா என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார். அதே சம்பவத்தில் அடையாளம் தெரிந்த நபர்கள் கடப்பாரையால் அடித்ததால் இடது பக்க நெஞ்சு பகுதி மற்றும் முதுகு பகுதிகளில் வலி இருப்பதாக கூறினார். நான் அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன.

1) இடதுபக்க நெஞ்சு பகுதியில் ரத்த வீக்க காயம் இருந்தது. அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேற்கண்ட காயத்திற்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அவர் அங்கு செல்லவில்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை பற்றி கூறமுடியாது என்று சான்று வழங்கினேன். **அசா.2ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ.5 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி காயம்பட்ட நபர்கள் நேரடியாக எங்களது மருத்துவமனைக்கு தான் சிகிச்சைக்காக வந்தார்கள். மேற்படி நபர்கள் குறித்து எழுத்து மூலமாக காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான். மேற்படி இவ்வழக்கில் ஈடுபடுத்தப்பட்டதாக கூறப்படும் கடப்பாரை கம்பு போன்றவற்றை என்னிடம் போலீசார் விசாரணையின்போது காண்பித்தார்களா என்றால் இல்லை. அசா.1 மாயாண்டிக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு குறித்து எக்ஸ்ரே எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுப்பதற்கு வசதிகள் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி அசா.1 மற்றும் அசா.2க்கு ஏற்பட்ட காயங்கள் அவர்கள் தானாக கால் இடறி கீழே விழுந்து ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.164/2021

**Depositions of PW- 10**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.முருகன் | Occupation | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Father's name | வைத்தியலிங்கம் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026.

19.02.2026

2ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருத்தங்கல் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 12.09.2020 அன்று நிலைய பொறுப்பிலிருந்தபோது மாலை 19.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த மாயாண்டி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப 20.00 மணியளவில் நிலைய குற்ற எண்.1069/2020 பிரிவுகள்.294(b). 323, 506(2) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அசாஆ.6 ஆகும். பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார் மனுவையும்இணைத்து சம்மந்தப்பட் நீதிமன்றத்திற்கும் அதன் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். பின்னர் இவ்வழக்கின் கோப்புகளை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இவ்வழக்கு சம்மந்தமாக அரசு மருத்துவமனையிலிருந்து எங்களுக்கு எழுத்துமூல தகவல் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி எழுத்துமூல தகவல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நான் கூறியவாறு மருத்துவமனையிலிருந்து தகவல் எதுவும் பெறப்படாததால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கானது இட பிரச்சனை சம்மந்தமாக உள்ளதால் எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.